## தலைப்பு 260 – நுவரெலியா மாவட்ட செயலகம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நுவரெலியா மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்

செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) மீண்டெழும் செலவினம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தின் சூரிய மின்சக்தி முறைமையிலிருந்து மீளாய்வாண்டில் தேசிய மின்சார முறைமைக்கு 5915 மின் அலகுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் பயன்படுத்திய அலகுகள் 7602 ஆக இருந்தது. மின்சாரச் செலவினத்தை கணக்கீடு செய்யும் போது பயன்படுத்திய அளவில் உற்பத்தி செய்த அளவு ஈடுசெய்யப்பட்டு பட்டியல் தீர்வு செய்தமையால் 5915 அலகுகளுக்குரிய செலவினம் மற்றும் வருமானம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | தற்போது காணப்படும் கணக்கீட்டு முறைமையின் கீழ் கணக்கீடு செய்வது இடம்பெறாமையால் இது தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்தின் கவனத்திற்கு தொடர்புபடுத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களத்திடமிருந்து வழங்கப்படும் ஆலோசணைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

#### (ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) மாவட்ட செயலகம் மற்றும் 03 பிரதேச செயலகங்களுக்கு 04 அரச சார்பற்ற அமைப்புக்களால் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் கிடைத்திருந்த 97 வெவ்வேறு சொத்து விடயங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | சகல சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் குறித்த அலுவலகங்களுக்கு அறிவித்து மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுமதிகளை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அரச சார்பற்ற அமைப்புக்களால் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்ட ரூபா 23,584,227 ஆன இரண்டு விற்பனை நிலையங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2 விற்பனை நிலையங்களின் பெறுமதியை கணக்கீடு செய்து எதிர்காலத்தில் அறிக்கை சமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (iii) | வலப்பனை பிரதேச செயலகத்திற்குரிய காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடன் சமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | காணி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**(இ) கட்டுநிதி மீதி**

---------------------

கட்டுநிதி மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்டு வரும் ரூபா 900,878 பெறுமதியான கட்டுநிதி மீதிகளை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு அலுவல்கள் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்தது | கட்டுநிதி மீதிக்கு தாக்கமளித்துள்ள தீர்வு செய்யப்படாத முற்பண மீதி தீர்வு செய்யப்பட வேண்டும். |

**(ஈ) இறுதி இருப்புக்களை கணக்கீடு செய்யாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகம், ஹங்குரங்கெத மற்றும் கொத்மலே பிரதேச செயலகங்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நுகர்வுப் பொருட்கள் இருப்பின் பெறுமதி ரூபா 5,467,752 நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே நுவரெலியா, அம்பகமுவ மற்றும் வலப்பனே பிரதேச செயலகங்களில் இறுதி இருப்பு காணப்பட்ட போதும் அவற்றின் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது காணப்படும் கணக்கீட்டு முறைமையின் கீழ் கணக்கீடு ஒன்று இடம்பெறுவதில்லை. ஆதலால் இது தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்தின் கவனம் செலுத்தப்படுவதாக அறநிவிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களத்திடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 02 செலவின விடயங்களுக்காக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்காத வகையில் ரூபா 1,586,756 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன | வருடாந்தம் ஒதுக்கீடு செய்யும் நிதிஏற்பாடு போதுமாக இல்லாமை காரணமாக பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது | நிதிப் பிரமாணம் 94 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 03 செலவின விடயங்களுக்காக கட்டுநிதி சேமிக்கப்பட்டிருக்கையில் ரூபா 300,240 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | 2021 பெப்ரவரி 31 ஆந் திகதியில் உள்ளவாறு உரிய கொடுப்பனவிற்காக கட்டுநிதி போதுமாக இல்லாமை, உறுதிச்சீட்டுக்கள் திசெம்பர் 31 இன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டமையால் பொறுப்புக்களுக்கு உட்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி சேமிக்கப்பட்டிருக்கையில் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படக் கூடாது. |

## (ஆ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

**அவதானிப்பு**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனானதை தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 4,2,2, 4:2:4, 4:2:5, 4:5, 4:6 மற்றும் 6.3 ஆம் பிரிவுகள் | 403,052 | கடன்தொகை கொடுப்பனவு செய்து தீர்வு செய்வதற்கு முன்னர் ஓய்வுபெற்றுள்ள மற்றும் மரணித்த உத்தியோகத்தர்கள் 3 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன்தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | ஓய்வூதிய பணிக்கொடை மற்றும் மரண பணிக் கொடை அங்கீகரிக்கப்படாததன் பேரில் கடன் மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. ஓய்வுதிய பணிக்கொடை மற்றும் மரண பணிக்கொடை அங்கீகரிக்கப்பட்டதும் குறித்த கடன்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2019 யூன் 27 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றமொன்று அடைந்திராத செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசின் வீடமைப்பு கட்டம் I இன் கீழ் மாவட்ட செயலக உத்தியோகத்தர் களுக்காக ரூபா 4,044,166 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் அந்நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக 2022 மார்ச் வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | இரண்டு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு தயாரித்து நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 05 மில்லியனே வழங்கப்பட்டிருந்தது. ஆதலால் அத்தொகைக்கு ஈடாகும் வகையில் நிலமாடியின் இயலுமான அளவு நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்கு ரூபா 05 மில்லியனே ஒதுக்கீடு செய்யப்பட்டதால் இவ்வாண்டிலும் நிலமாடியின் வேலைகளை பூர்த்தி செய்து முதலாம் மாடியின் ஒரு பகுதியை நிறைவேற்றுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதிஏற்பாடு கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது | தேவையான நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டு நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | அனர்த்த நிவாரண சேவைகளின் கீழ் மீள்குடியேற்ற நிகழ்ச்சிகளின் செயன் முன்னேற்றம் நூற்றுக்கு 100 எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதும் கொத்மலே பிரதேச செயலகத்தின் மண்சரிவினால் மீள்குடியேற்றப்பட வேண்டிய 105 குடும்பங்களுக்காக 105 வீடுகளை அமைப்பதற்காக ரூபா 126,000,000 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிர்மாணிக்கப்பட்டிருக்க வில்லை. | 98 வீடுகளில் 40 இற்கு உடன்படிக்கையின் பிரகாரம் ஒரு வீட்டுக்கு 2 இலட்சம் வீதம் வேலைகள் செய்யப்பட்டிருந்தன. தோட்ட வீட்டு கூட்டுறவுச் சங்கத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அமைச்சிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது | செயற்திட்டத்தினை பூர்த்தி செய்து அந்த எதிர்பார்த்த நோக்கங்ளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | தொடர்பாக கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்குரிய ஜீப் வண்டியொன்று மீளாய்வாண்டின் இறுதியில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட 1 ½ ஆண்டுகள் அளவில் விளைவற்றுக் காணப்பட்டது. | திருத்த வேலைகளுக்காக தேவையான உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்வதற்கு சிரமமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வாகனங்களின் திருத்த வேலைகளை மேற்கொண்டு ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்காமை

நுவரெலியா மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணைகளுக்கு 2022 யூலை 18 ஆந் திகதி வரையிலும் பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு விசாரணை இலக்கமும் விபரங்களும் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) என்யூஈ/ஏ/கேசீஎச்/2022/09 - குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் 100,000 உறுப்பினர்களுக்கு துறைசார் பயிற்சி வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம், மாவட்ட செயலகம், நுவரெலியா | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு விசாரணைகளுக்கு உரிய காலப்பகுதியில் பதில் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) என்யூஈ/ஏ/கேசீஎச்/2021/13 - இலக்கம் 40 சீ உடைய கனிஷ்ட பொது சேவை விடுதியின் பதிவு தொடர்பான பரிசோதனை மாவட்ட செயலகம், நுவரெலியா | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) என்யூஈ/ஏ/என்ஈ/2021/06 - காணி குத்தகைக்கு வழங்கல் பரிசோதனை பிரதேச செயலகம், நுவரெலியா | - மேற்படி - | - மேற்படி - |

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 திசெம்பர் 15 ஆந் திகதிய 19/2006 ஆம் இலக்க ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் தமது பிரிவில் ஓய்வுபெற்ற ஒருவர் மரணித்த 07 நாட்களுக்குள் ஓய்வூதிய இலக்கத்துடன் அது தொடர்பாக உடனடியாக ஓய்வூதியத்தை பெறும் பிரதேச செயலகத்திற்கு கிராம சேவையாளரால் அறிவிக்க வேண்டும். எனினும் கொத்மலே மற்றும் ஹங்குரன்கெத அதிகாரப் பிரதேசங்களில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் 2016 முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதிக்கு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 2,135,772 மற்றும் ரூபா 1,581,391 தொகைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியருந்தது | வலது குறைந்தோர் ஓய்வூதியம் மற்றும் சேவை ஓய்வூதியம் என்பவற்றை ஒன்றினைத்து பின்னர் அறவிடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4. நிலைபேறான அபிவிருத்தி

**நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாவட்ட செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்படும் அனைத்து பிரிவுகளின் நோக்கங்களை கருத்திற் கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ள குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் உள்ளவாறு அடைந்து கொண்ட இலக்குகள் தொடர்பான புள்ளிவிபரங்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை. | உரிய பிரிவுகளினால் தயாரிக்கப்பட்டுள்ள நிலைபேறான நோக்கங்களுக்கரிய குறிகாட்டிகளின் பிரகாரம் அடைந்து கொள்ளக்கூடிய இலக்குகள் சதவீதமொன்றாக செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | செயலாற்றலை வருடாந்தம் திட்டவட்டமாக மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் குறிகாட்டிகள் தாபிக்கப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாவட்ட செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 11 ஆக இருந்த போதும் 10 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன. | இது தொடர்பாக அவ்வப்போது அமைச்சிற்கு தெரியப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்பப்பட வேண்டும் |